பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

12 04 2024 7 15
வெள்ளிக்கிழமை காலை

தலைப்புச் செய்திகள்

1. மக்களவைக்கு மூன்றாவது கட்ட தேர்தல் நடைபெறவுள்ள 94 தொகுதிகளில் வேட்புமனு தாக்கல் இன்று தொடங்குகிறது.

2. பயங்கரவாதத்தை ஒடுக்க பாகிஸ்தானுக்கு உதவ இந்தியா தயாராக உள்ளதாக மத்திய அமைச்சர் திரு ராஜ்நாத்சிங் கூறியுள்ளார்.

3. நாட்டின் மதசார்பற்ற ஜனநாயகத்தை பாதுகாப்பதற்காக எதிர்க்கட்சிகள் அனைத்தும் ஓரணியில் திரண்டிருப்பதாக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச்செயலாளர் திரு சீதாராம் யச்சூரி தெரிவித்துள்ளார்.

4. நேபாளத்தில் நீர்மின் திட்டம் உள்ளிட்ட துறைகளில் முதலீடு செய்ய முன்வருமாறு இந்திய தொழிலதிபர்களுக்கு அந்நாட்டு அரசு அழைப்பு விடுத்துள்ளது.

5. பாரிஸ் ஒலிம்பிக் போட்டியில் துப்பாக்கி சுடும் பிரிவில் பங்கேற்பதற்கான இறுதி தகுதிப் போட்டிகள் ரியோடி ஜெனிரோவில் இன்று தொடங்குகிறது.

*----- இனி விரிவான செய்திகள் ---*

**[]<<<>>>[]**

மக்களவைக்கு மூன்றாவது கட்ட தேர்தல் நடைபெறவுள்ள 94 தொகுதிகளுக்கான அறிவிக்கை இன்று வெளியிடப்படுகிறது.

இதையடுத்து மூன்றாவது கட்ட வாக்குப்பதிவு நடைபெறவுள்ள பத்து மாநிலங்கள் மற்றும் இரண்டு யூனியன் பிரதேசங்களுக்கு உட்பட்ட தொகுதிகளில் இன்று வேட்புமனு தாக்கல் தொடங்குகிறது.

மத்திய பிரதேச மாநிலத்தில் இரண்டாவது கட்ட வாக்குப்பதிவு நடைபெறவுள்ள பெதுல் மக்களவைத் தொகுதியில் பகுஜன் சமாஜ் கட்சியின் வேட்பாளர் மரணமடைந்த காரணத்தால் அந்த தொகுதிக்கான தேர்தல் அறிவிக்கையும் இன்று வெளியிடப்படுகிறது.

இந்த தொகுதிகளில் இம்மாதம் 19-ஆம் தேதி வரை மனு தாக்கல் செய்யலாம்.

வாக்குப்பதிவு அடுத்த மாதம் ஏழாம் தேதி நடைபெறும் என்ற தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

இதனிடையே முதல்கட்ட மற்றும் இரண்டாவது கட்ட வாக்குப்பதிவுக்கான பிரச்சாரம் தீவிர கட்டத்தை எட்டியுள்ளது.

தேசிய மற்றும் மாநில கட்சிகளின் தலைவர்கள் இந்த தொகுதிகளில் முகாமிட்டு தங்களது கட்சி மற்றும் கூட்டணியில் இடம்பெற்றுள்ள கட்சிகளின் வேட்பாளர்களுக்கு ஆதரவு திரட்டி வருகின்றனர்.

உத்தராகண்ட் மாநிலத்தில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்ட பிஜேபி மூத்த தலைவரும், மத்திய அமைச்சருமான திரு ராஜ்நாத்சிங், பயங்கரவாதத்தை ஒடுக்க பாகிஸ்தானுக்கு உதவ இந்தியா தயாராக உள்ளதாகக் கூறினார்.

அதே நேரத்தில் தீவிரவாதத்தை பயன்படுத்தி இந்தியாவை சீர்குலைக்க பாகிஸ்தான் முயன்றால் கடுமையான விளைவுகளை சந்திக்க நேரிடும் என்றும் அவர் எச்சரித்தார்.

நேற்று சென்னையில் பிரச்சாரம் மேற்கொண்ட மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச்செயலாளர் திரு சீதாராம் யச்சூரி, மத்திய அரசு சிபிஐ, வருமான வரித்துறை, அமலாக்கு இயக்குநரகம் உள்ளிட்ட சுயேச்சையான அமைப்புகளை எதிர்க்கட்சிகளுக்கு எதிரான தவறாக பயன்படுத்துவதாகக் குற்றம்சாட்டினார்.

நாட்டின் மதசார்பற்ற ஜனநாயகத்தை பாதுகாப்பதற்காக எதிர்க்கட்சிகள் அனைத்தும் ஓரணியில் திரண்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

தேர்தல் பத்திரம் மூலமாக பிஜேபி அதிக அளவில் நிதியை திரட்டி இருப்பது குறித்து பிரதமர் நாட்டு மக்களுக்கு விளக்க வேண்டுமென்றும் திரு சீதாராம் யச்சூரி கேட்டுக் கொண்டார்.

**[]<<<>>>[]**

இந்திய – மியான்மர் எல்லையில் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேலி அமைக்க இந்தியா உறுதிபூண்டுள்ளதாக வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

மக்களவைத் தேர்தலை முன்னிட்டு அம்மாநில தலைநகர் ஐஸ்வாலில் நேற்று பிஜேபி-யின் தொலைநோக்கு அறிக்கையை வெளியிட்டு பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மியான்மர் அமைதியான நாடாக இருந்திருந்தால் எல்லையில் வேலி அமைக்க வேண்டிய அவசியம் இந்தியாவுக்கு ஏற்பட்டிருக்காது என்றார்.

அந்நாட்டில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்த காரணத்தால் அங்கிருந்து பெருமளவிலான போதைப்பொருட்கள் இந்தியாவுக்கு கடத்தப்படுவது கவலையளிக்கும் விஷயம் என்பதால் அதை தடுக்க இருநாடுகளின் எல்லையில் வேலி அமைப்பது அவசியம் என்று அவர் கூறினார்.

**[]<<<>>>[]**

குடியுரிமை திருத்தச் சட்டம், தேசிய குடிமக்கள் பதிவேடு, பொது சிவில் சட்டம் ஆகியவற்றை திரிணமூல் காங்கிரஸ் கட்சி ஏற்றுக் கொள்ளாது என்று அக்கட்சியின் தலைவரும், மேற்குவங்க முதலமைச்சருமான செல்வி மம்தா பானர்ஜி கூறியுள்ளார்.

கொல்கத்தாவில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், இந்த சட்டங்களை மேற்குவங்கத்தில் வலுக்கட்டாயமாக அமல்படுத்த மாநில அரசு அனுமதிக்காது என்று கூறினார்.

நாட்டில் உள்ள அனைத்து மக்களும் சகோதரர்கள்போல் அமைதியாகவும், இணக்கமாகவும் வாழ வேண்டுமென்று தாங்கள் விரும்புவதாகவும் அவர் தெரிவித்தார்.

மத்திய விசாரணை அமைப்புகளை, மத்திய அரசு தவறாக பயன்படுத்தி எதிர்க்கட்சிகளை அச்சுறுத்தி வருவதாகவும் செல்வி மம்தா பானர்ஜி குற்றம்சாட்டினார்.

**[]<<<>>>[]**

பிரதமர் திரு நரேந்திரமோடி தலைமையிலான மத்திய அரசு சாமானிய மக்களின் வளர்ச்சியை உறுதி செய்துள்ளதாக பிஜேபி தேசிய மகளிரணி தலைவர் திருமதி வானதி சீனிவாசன் தெரிவித்துள்ளார்.

நாமக்கல் மாவட்டத்தில் நேற்று பிரச்சாரத்தில் ஈடுபட்ட அவர், அனைவருக்கும் வீடு, அனைத்து இல்லங்களுக்கும் குழாய் மூலம் குடிநீர் மற்றும் கழிப்பிட வசதியை தற்போதுள்ள பிஜேபி அரசுதான் செய்து கொடுத்துள்ளதாகக் கூறினார்.

மத்திய அரசின் திட்டங்களினால் தமிழகத்தில் உள்ள மக்களும் பெருமளவில் பயனடைந்துள்ளனர் என்றும், சமையல் எரிவாயு மற்றும் விவசாயிகளுக்கான மானியம் நேரடியாக பயனாளிகளின் வங்கிக் கணக்கில் செலுத்தப்படுவதாகவும் திருமதி வானதி சீனிவாசன் தெரிவீத்தார்.

**[]<<<>>>[]**

மத்தியில் ஆட்சி மாற்றம் ஏற்பட வேண்டியது அவசியம் என்று பெரும்பாலான மக்கள் கருதுவதாக இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச்செயலாளர் திரு டி ராஜா கூறியுள்ளார்.

திருத்துறைப்பூண்டியில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், பிரதமர் திரு நரேந்திரமோடி பிரச்சாரம் மேற்கொள்ளும் இடங்களில் வேலையின்மை, விலைவாசி உயர்வு, மத நல்லிணக்கம் ஆகியவை குறித்து பேச மறுப்பதாகத் தெரிவித்தார்.

கடந்த மக்களவைத் தேர்தலின்போது நாட்டு மக்களுக்கு பிஜேபி அளித்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை என்றும் திரு டி ராஜா குறை கூறினார்.

[]<<<>>>[]

நாடு முழுவதும் அதிகரித்து வரும் வெப்பத்திலிருந்து மக்களை பாதுகாக்க மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து பிரதமர் திரு நரேந்திரமோடி நேற்று ஆய்வு மேற்கொண்டார்.

இந்த கூட்டத்தில் இம்மாதம் முதல் ஜூன் மாதம் வரை வானிலை முன்னறிவிப்புகளை பிரதமருக்கு அதிகாரிகள் விளக்கினர்.

நாட்டின் மத்திய பகுதியிலும், மேற்குப்பகுதியிலும் இயல்புக்கு அதிகமாக வெப்பத்தின் தாக்கம் இருக்கும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளதை அதிகாரிகள் எடுத்துரைத்தனர்.

எனவே கோடை காலத்தில் மக்களுக்குத் தேவையான அத்தியாவசிய மருந்துகள், உப்புக்கரைசல் தண்ணீர் உள்ளிட்ட அடிப்படை வசதிகளை செய்துதர வேண்டுமென்று பிரதமர் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

வெப்பத்தின் தாக்கம் குறித்து தொலைக்காட்சி, வானொலி மற்றும் சமூக ஊடகங்களில் அந்தந்த மாநில மொழிகளில் முன்னறிவிப்புகளை வெளியிட வேண்டுமென்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

இந்த பணிகளை மத்திய மாநில மற்றும் மாவட்ட அளவிலான அரசு நிர்வாகங்கள் இணைந்து மேற்கொள்ள வேண்டியது அவசியம் என்றும் திரு நரேந்திரமோடி குறிப்பிட்டார்.

கோடைக் காலத்தில் வனப்பகுதிகளில் ஏற்படும் காட்டுத்தீயை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளையும் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டுமென்றும் திரு நரேந்திரமோடி அறிவுறுத்தினார்.

[]<<<>>>[]

நேபாளத்தில் நீர்மின் திட்டம் உள்ளிட்ட துறைகளில் முதலீடு செய்ய முன்வருமாறு இந்திய வர்த்தகர்களுக்கு அந்நாட்டு அரசு அழைப்பு விடுத்துள்ளது.

புதுதில்லியில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பேசிய இந்தியாவுக்கான நேபாள தூதர் திரு சங்கர் பிரசாத் சர்மா, இந்திய முதலீட்டாளர்களுக்கு தேவையான வசதிகளை நேபாளம் செய்து தரும் என்று கூறினார்.

நேபாளத்தில் அதிகமாக முதலீடு செய்துள்ள நாடு இந்தியா என்றும், மொத்த முதலீட்டில் மூன்றில் ஒரு பங்கு இந்தியாவிலிருந்து கிடைத்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

[]<<<>>>[]

இந்தியா – பெரு வர்த்தக உடன்படிக்கை தொடர்பான எழாவது சுற்று பேச்சுவார்த்தை நேற்று புதுதில்லியில் நிறைவடைந்தது.

இரு நாடுகளும் பயன்பெறக்கூடிய பரஸ்பரத் துறைகளில் முன்னுரிமை அடிப்படையில் ஒப்பந்தங்களை செய்து கொள்வது தொடர்பாக இந்த பேச்சுவார்த்தையில் விவாதிக்கப்பட்டது.

[]<<<>>>[]

கஷ்மீர் பள்ளத்தாக்கில் தடை செய்யப்பட்ட லஷ்கர்-ஈ-தொய்பா தீவிரவாத அமைப்புடன் தொடர்பு வைத்திருந்ததாக மூன்று பேரை பாதுகாப்புப் படையினர் கைது செய்துள்ளனர்.

பாரமுல்லா பகுதியில் காவல்துறையினரும், பாதுகாப்புப் படையினரும் திடீர் சோதனை மேற்கொண்டபோது முக்கியமான ஆவணங்களும், கையெறி குண்டுகளும் பறிமுதல் செய்யப்பட்டன.

பாதுகாப்பு நிலைகளை குறிவைத்து தாக்குதல் நடத்த தீவிரவாதிகள் பாரமுல்லா நகருக்குள் நுழைந்துள்ளதாக கிடைத்த ரகசிய தகவலையடுத்து பாதுகாப்புப் படையினர் இந்த நடவடிக்கையை மேற்கொண்டதாக காவல்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

[]<<<>>>[]

பாரிஸ் ஒலிம்பிக் போட்டியில் துப்பாக்கி சுடும் பிரிவில் பங்கேற்பதற்கான இறுதி தகுதிப் போட்டிகள் ரியோடி ஜெனிரோவில் இன்று தொடங்குகிறது.

மகளிர் பத்து மீட்டர் ஏர்பிஸ்டல் பிரிவில் இந்தியாவைச் சேர்ந்த 19 பேர் ஏற்கனவே தகுதி பெற்றுள்ள நிலையில், எஞ்சிய இடங்களுக்கான தகுதிப்போட்டி இன்று நடைபெறுகிறது.

இதில் 76 நாடுகளைச் சேர்ந்த 466 பேர் பங்கேற்கின்றனர்.

[]<<<>>>[]

ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் நேற்று நடைபெற்ற பெங்களூரு அணிக்கு எதிராக ஆட்டத்தில் மும்பை அணி ஏழு விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

மும்பையில் நடைபெற்ற இப்போட்டியில் முதலில் ஆடிய பெங்களூரு அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் எட்டு விக்கெட் இழப்புக்கு 196 ரன் எடுத்தது.

197 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய மும்பை அணி 15 புள்ளி மூன்று ஓவரிலேயே மூன்று விக்கெட் மட்டுமே இழந்து வெற்றி இலக்கை எட்டியது.

இன்று லக்னோவில் நடைபெறவுள்ள ஆட்டத்தில் தில்லி அணி – லக்னோ அணியை எதிர்கொள்கிறது.

[]<<<>>>[]

ஐ எஸ் எல் கால்பந்து போட்டியில் நாக்-அவுட் சுற்று போட்டிகள் இம்மாதம் 19, 20 தேதிகளில் நடைபெறவுள்ளது.

அரை இறுதி ஆட்டங்கள் இம்மாதம் 23-ஆம் தேதி தொடங்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இறுதிப்போட்டி அடுத்த மாதம் நான்காம் தேதி நடைபெறுகிறது.

***End of News***